<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | **:** | 115/2024 | சாட்சியம் | **:** | **RW1** |
| **Name** | **:** | திரு.நரசிம்மன் | | | |
| **Date** | **:** | **10.03.2026** | | | |
| **Time** | **:** | **3.20 p.m to 4.41 p.m** | | | |

<u>எ.த.சா.1.திரு.நரசிம்மன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து தான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். பதிலுரையில் நான் தான் கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். வழக்கு விவரம் முழுமையாக தெரியும். நான் 2011 ஆம் ஆண்டு எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன். நான் பொது மேலாளராக வேலைக்கு சேர்ந்தேன். இப்போது வரை அதே வேலையில் தான் இருக்கிறேன். மனுதாரரை தெரியும். எங்களுக்கு என்று சான்றிட்ட நிலையாணை உள்ளது. 2013 ஆம் ஆண்டு பெறப்பட்டது என நினைக்கிறேன். சான்றிட்ட நிலையாணை தாக்கல் செய்யவில்லை. சான்றிட்ட நிலையாணை முன்னிலைக்கு ஒருவரை இரண்டு ஆண்டுகள் வரை பயிற்சி பெறுபவராக எங்கள் நிறுவனத்தில் வைத்துக் கொள்ளலாம். அதன் பிறகு தகுதிக்காண் பருவத்தில் ஒரு வருடம் வரை

வைத்திருப்போம். அதன் பிறகு பணி நிரந்தரம் செய்வோமா என்றால் அவர்களின் செயல்பாடு திருப்தியாக இருக்கும் பொழுது பணி நிரந்தரம் செய்வோம். செயல்பாடு திருப்தியாக இல்லாத பட்சத்தில் என்ன செய்வோம் என்றால் தகுதிகாண் பருவத்திலேயே தொடர்ந்து நாங்கள் வேலையில் வைத்திருப்போம். அவ்வாறு தகுதி காண் பருவத்தில் எத்தனை காலம் வரை வைத்திருப்போம் என்றால் கால வரையறை எதுவும் இல்லை. தகுதிக்காண் பருவத்திலேயே தொடர்ந்து வைப்பதற்கு சான்றிட்ட நிலையாணையில் ஷரத்து உள்ளதா என்றால் நினைவில்லை. தேவைப்பட்டால் சான்றிட்ட நிலையாணையை தாக்கல் செய்ய தயாராக உள்ளோம். ம**.**சா**.**ஆ**.3** மனுதாரருக்கு வழங்கப்பட்ட பணி நியமன உத்தரவு என்றால் ஆமாம் ம**.**சா**.**ஆ**.4** முதல் ஆண்டு பயிற்சி காலத்தை திருப்திகரமாக முடித்து இருப்பதால் இரண்டாம் ஆண்டு பயிற்சி காலம் தொடர்வதற்காக கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். இரண்டாவது ஆண்டு பயிற்சி காலத்தையும் திருப்திகரமாக முடித்த காரணத்தினால் ம**.**சா**.**ஆ**.5** வழங்கப்பட்டது என்றால் ஆமாம். தகுதிக்காண் பருவம் முடிவடைந்த பிறகு அவருடைய செயல்பாடு குறித்து ஏதேனும் பகுத்தாய்வு செய்யப்பட்டதா என்றால் ஆவணங்களை பார்க்க வேண்டும். ஒரு ஆண்டு தகுதிக்காண் பருவம் முடிவடைந்த நிலையில் கட்டாயமாக பணி நிரந்தர உத்தரவு

வழங்கப்பட வேண்டும் என்றால் இல்லை. தகுதிகாண் பருவம் முடிவடைந்த பின்னர் ஷரத்து 10 முன்னிலைக்கு நிரந்தரம் செய்வதற்கு தேர்வு வைத்திருக்க வேண்டும் என்றால் ஆமாம். அது போன்று தேர்வு எதுவும் மனுதாரருக்கு வைக்கவில்லை என்றால் நினைவில்லை. Assessment Report உள்ளதா என்றால் பார்க்க வேண்டும். Assessment Report இல்லையென்றாலும் டெஸ்ட் எதுவும் வைக்கவில்லை என்றாலும் அதனால் தான் அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மனுதாரர் CNC ஆப்பரேட்டர் வேலை பார்த்தார் என்றால் இல்லை. Press Machine-ல் Forming செய்துவந்தார். எங்கள் நிறுவனத்தில் வேலைக்கு சேர்வதற்கு முன்னர் மனுதாரர் ஹூண்டாய் கம்பெனியிலும் Engine Automotive பிரைவேட் லிமிடெட் என்ற கம்பெனியிலும் வேலை பார்த்து வந்து அது சம்பந்தமாக விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் தெரியாது. ம.சா.ஆ.11 மனுதாரருக்கு 01.10.2022 தேதியிட்ட பணி நிரந்தர உத்தரவு வழங்கப்பட்டது என்றால் ஆமாம். அந்த உத்தரவில் 04.07.2014 முதல் மனுதாரர் பணி நிரந்தரம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது என்றால் ஆமாம். கம்பெனியில் தொழிலாளரின் ஊதியத்தை நிர்ணயம் செய்வதற்காக தொழிலாளர் பணி குழு மூலமாக 18(1) செட்டில்மெண்ட் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

ம.சா.ஆ.6,8,9,20 ஆகியவை 18(1) செட்டில்மெண்ட் என்றால் ஆமாம். ம.சா.ஆ.6 27.03.2014 ல் போடப்பட்ட செட்டில் மெண்ட் என்றால் சரி. அந்த ஒப்பந்தம் அப்போது இருந்த நிரந்தர தொழிலாளர்களுக்கு போடப்பட்டது என்றால் ஆமாம். அந்த தேதியில் மனுதாரருக்கு பணி நிரந்தர உத்தரவு வழங்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஆவணத்தில் பிரிவு 3 ல் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.10,000/- உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பிரிவு-I ல் ஜனவரி பிப்ரவரி மாதத்திற்கு நிலுவை தொகை வழங்க வேண்டும் என கண்டுள்ளது என்றால் ஆமாம். ம.சா.ஆ.**8**, 05.05.2017 ல் போடப்பட்ட ஒப்பந்தம் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தம் அப்போது இருந்த நிரந்தர தொழிலாளர்களுக்கு போடப்பட்டது என்றால் ஆமாம்.அந்த ஆவணத்தில் பிரிவு-3 ல் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.11,000/- உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ம.சா.ஆ.**9**, 30.01.2021 ல் போடப்பட்ட ஒப்பந்தம் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தம் அப்போது இருந்த நிரந்தர தொழிலாளர்களுக்கு போடப்பட்டது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் பிரிவு-3 ல் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.12,000/- உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ம.சா.ஆ.**20**, 26.07.2024 ல் போடப்பட்ட ஒப்பந்தம் என்றால் ஆமாம். அந்த ஒப்பந்தம் அப்போது இருந்த நிரந்தர தொழிலாளர்களுக்கு போடப்பட்டது என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் மூன்று ஆண்டுகளுக்கு ரூ.11,500/-

உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மேற்படி 18(1) கீழான செட்டில்மெண்ட்டானது அதில் கையொப்பம் இட்டுள்ளவர்களுக்கு மட்டுமே பொருந்தும். என்னிடம் காட்டப்படுவது 26.07.2024-ல் ஏற்படுத்தி கொண்ட ஒப்பந்தம் என்றால் ஆமாம். அது ம**.**சா**.**ஆ**.24**. மேற்படி செட்டில்மெண்டில் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டவர்கள் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். 26 பேர் கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் ஆமாம். மொத்தம் 27 பேர் நிரந்தர தொழிலாளர்கள் என்றால் ஆமாம். ம**.**சா**.**ஆ**.6,8,9** ல் நிரந்தர தொழிலாளர்களின் கையொப்பம் ம**.**சா**.**ஆ**.24** ல் பெறப்பட்டுள்ளது போன்று பெறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி அனைத்து செட்டில்மெண்ட் ஏற்பட்ட பின்னர் தான் மனுதாரருக்கு பணி நிரந்தர உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது என்றாலும் மனுதாரருக்கு உரிய காலத்தில் பணியை நிரந்தர உத்தரவு வழங்கப்பட்டிருக்குமே ஆனால் அவருடைய பெயரும் கையொப்பமும் கூட அந்த செட்டில்மெண்டில் இடம் பெற்று இருக்கும் என்றாலும் நாங்கள் உரிய காலத்தில் பணியை நிரந்தர உத்தரவு வழங்காத காரணத்தினால் தான் அந்த செட்டில்மெண்டில் மனுதாரரின் கையொப்பம் மற்றும் பெயர் இடம் பெறவில்லை என்றாலும் சரியில்ல. ஏனென்றால் 2024 இல் ஒப்பந்தம் ஏற்படுத்திய போது மனுதாரரிடம் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்ட சொல்லி சொன்னோம் அவர் போட

மறுத்துவிட்டார். 2022 ஆம் ஆண்டு அவருக்கு பணி நிரந்தர உத்தரவு வழங்கப்பட்ட போதும் ஒப்பந்தத்தில் கையெழுத்து போட சொல்லி சொன்னோம் அவர் மறுத்துவிட்டார். 2022 இல் பணி நிரந்தர உத்தரவு வழங்கப்பட்ட பின்னர் மனுதாரர் அவருக்கு நிலுவை தொகை வழங்க வேண்டும் என கேட்டு 03.10.2022 அன்று மனு கொடுத்தார் என்றால் ஆமாம். (ம.சா.ஆ.12) அதற்கு நிர்வாக தரப்பில் இருந்து பதில் எதுவும் வழங்கப்படவில்லை. 08.06.2023 தேதியிட்ட கடிதம் மனுதாரர் கொடுத்தார் என்றால் ஆமாம். அதற்கு நிர்வாகம் பதில்கெடுத்ததா என்றால். நிலுவை தொகை கணகிட்டு மனுதாரரிடம் கொடுத்தோம். அதில் அவர் கையொப்பம் போட மறுத்துவிட்டார். அதற்கான ஆவணம் எ.சா.ஆ.**9**. மேற்படி ஆவணம் மனுதாரருக்கு உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை என்றாலும் பிரமாண வாக்குமூல சாட்சியத்துடன் தான் அந்த ஆவணம் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. ராஜேஷ், அரவிந்தராஜ் ஆகிய தொழிலாளர்கள் எந்த தேதியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள் என்ற விவரத்தை என்னுடைய சாட்சியத்தில் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படுவது ராஜேஷுக்கு வழங்கிய பணி நிரந்தர உத்தரவு என்றால் சரி. அது ம.சா.ஆ.**25.** என்னிடம் காட்டப்படுவது ராஜேஷுக்கு உரிய சம்பள ரசீது என்றால் ஆமாம். அது ம.சா.ஆ.**26.** 10.01.2018 தேதியிட்ட

பணி நிரந்தர உத்தரவு அந்த தேதியில் இருந்து வழங்கப்பட்டது என்றால் ஆமாம். 10.10.2011 இல் ராஜேஷ் வேலைக்கு சேர்ந்தார் என்றால் ஆமாம். எ.சா.ஆ.7 ஆவணத்தில் செட்டில்மெண்டை ஏற்றுக் கொள்வதாகவும் ஒப்பந்தத்தை ஒப்புக்கொள்வதாகவும் ராஜேஷ் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. எ.சா.ஆ.6 தொழிலாளர் பணி குழு தீர்மானம் இயற்றி கொடுத்ததாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 29.12.2013 தேதியிட்டது என்றால் ஆமாம். நிலையாணைக்கு அங்கீகாரம் பெறுவதற்காக தீர்மானம் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதன்பிறகு தான் சான்றிட்ட நிலையாணை பெறப்பட்டிருக்கும் என்றால் ஆமாம். அதற்கு முன்னர் தொழிலாளர்களுக்கு எதன் அடிப்படையில் பணி நியமன உத்தரவு வழங்கப்பட்டது என்றால் மாதிரி நிலையாணை முன்னிலைக்கு வழங்கப்பட்டது. மாதிரி நிலையாணை படி ஒரு நபரை எத்தனை ஆண்டுகளுக்கு பயிற்சியாளராக வைத்துக் கொள்ள முடியும் என்றால் சரியாக தெரியவில்லை. தொழிலாளர் பணி குழு உடன் தான் நிர்வாகம் ஒப்பந்தம் ஏற்படுத்தியது என்றால் ஆமாம். எ.சா.ஆ.6 தீர்மானத்தை தவிர வேறு தீர்மானம் எதுவும் தாக்கல்செய்யவில்லை. மேற்படி தீர்மானத்தில் வரிசை எண் 14-ல் கண்டுள்ளது மனுதாரரின் கையொப்பம் என்றால் ஆமாம். தொழிலாளர் பணி குழு ஏற்பட மனுதாரர் ஒப்புதல் அளித்துள்ளார் என்றால்

ஆமாம். எ.சா.ஆ.**9** ல், ஏப்ரல் 2018-ல் இருந்து தான் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த கணக்கீட்டை நாங்கள் செட்டில்மெண்ட் முன்னிலைக்கு கணக்கீடு செய்துள்ளோமா என்றால் ஆமாம். செட்டில்மெண்ட் முன்னிலைக்கு தான் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ம.சா.ஆ.**2** மனுதாரரை பாராட்டி வழங்கப்பட்ட சான்றிதழ் என்றால் ஆமாம். அவரின் வருகை பதிவேட்டை பாராட்டி கொடுக்கப்பட்ட சான்றிதழ் ஆகும். அந்த ஆவணத்தில் அவரின் உற்பத்தி திறன் செயல்பாட்டையும் பாராட்டி தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2013-ல் மனுதாரருக்கு பணி நிரந்தர உத்தரவு வழங்கப்படவில்லை என்றால் ஆமாம். நாங்கள் கடைசியாக ஏற்படுத்திய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதாக மனுதாரர் 10.11.2025-ல் ஒரு கடிதம் கொடுத்தார் என்றால் ஆமாம். அது ம.சா.ஆ.27. மேற்படி கடிதத்திற்கு 26.12.2025 ல் நிர்வாகம் கொடுத்த பதில் என்னிடம் காட்டப்படுவது என்றால் ஆமாம். அது ம.சா.ஆ.28. செட்டில்மெண்டை ஏற்றுக் கொள்வதாக தொழிலாளி கடிதம் கொடுத்த பின்னரும் கூட அவருடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு நாங்கள் அவருக்கு பணப்பலனை வழங்கவில்லை என்றால் 2024 ல் ஏற்படுத்திய ஒப்பந்தம் முன்னிலைக்கு பணம் தருவதாக தான் சொல்லி உள்ளோம்.

ஆனால் பணத்தை இதுவரை தரவில்லை. உரிய காலத்தில் மனுதாரருக்கு பணி நிரந்தர உத்தரவு வழங்காமல் இடைப்பட்ட காலத்தில் ஒப்பந்தத்தை ஏற்படுத்திவிட்டு அந்த ஒப்பந்தம் முன்னிலைக்கும் மனுதாரருக்கு பணத்தொகையை கொடுக்காமல் இருப்பது தவறு என்றால் எனவே கோரிக்கை படி அவர் கேட்டுள்ள தொகையை கொடுக்க நிர்வாகம் கடமைப்பட்டுள்ளது என்றாலும் 2024-ல் ஏற்படுத்திய ஒப்பந்தத்திற்கான தொகையை தான் மனுதாரர் வாங்கவில்லை அதற்கு முன்னர் உள்ள காலகட்டத்திற்கு அவர் ஒப்பந்தம் அடிப்படையில் தான் பெற்று வந்தார். நிலுவைத் தொகையை மனுதாரர் பெற்றுக் கொள்ளவில்லை ஆனால் அவருக்கு உரிய சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. மனுதாரருக்கு ஒப்பந்தம் அடிப்படையில் சம்பளம் நிர்ணயம் செய்து வழங்கப்படவில்லை என்றாலும் அவ்வாறு வழங்கப்படுவதாக சொல்வது தவறு என்றாலும் சரியல்ல மனுதாரருக்கு நிலுவை தொகை எதுவும் வழங்கவில்லை என்றால் ஆமாம். மனுப்படி உத்தரவாக வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

S SUJATHA

Digitally signed by S SUJATHA
Date: 2026.03.10 18:28:39 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:10.03.2026.